# உங்களை எச்சரிக்கை செய்யும் அந்த சத்தத்தை ஒருபோதும் அமைதிபடுத்தி அடக்கிப்போடாதீர்கள்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: **என்னைப் பின்பற்றி வா,**

ஜூன் 1, 1963, டூசான், அரிசோனா, அமெரிக்கா

104. அநேக வருடங்களுக்கு முன்பு, நான் உங்கள் எல்லாரையும் போன்று, சிறு பையனாய் இருக்கையில், இங்கே பினிக்ஸ்-க்கு மேற்பகுதியில் கால்நடைப் பண்ணையில் இருந்தேன். அப்போது ஒரு துண்டு காகிதத்தில், கனிம வளத்தைத் தேடும் ஒருவரைக் குறித்தும் (கனிம வளத்தைக் குறித்தும்) போடப்பட்டிருந்ததை வாசித்துக் கொண்டிருந்தேன். அப்போது, இது நெடுகிலும் சாலைகள் கிடையாது, வெறுமனே சிறிய மணல் பாதை தான் இருந்தது. அவர்கள் இன்னும் இங்கே கனிம வளத்தைக் குறித்து அநேக ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியும்.

105. ஆனால் இந்தக் கனிம ஆராய்ச்சியாளர் இந்த இடத்திற்குள்

வந்திருந்தார், அவர் திரளான செல்வத்தைக் கண்டு பிடித்திருந்தார், எதிர்பாராதவிதமாக திரளான தங்கத்தையும் கண்டுபிடித்திருந்தார். அவருடைய பாதையில் அவர் கண்டுபிடித்திருந்த ஒரு சிறு அறையில் அவர் தங்கியிருந்தார். அவரோடு ஒரு நாயையும் வைத்திருந்தார், அந்த நாய் வெளிப்புறத்தில் கட்டப்பட்டிருந்தது.

அந்த இரவு வேளையில், இந்தத் தங்கத்தைப் பறித்துக் கொள்வதற்காக, கொள்ளைக்காரன் ஒருவன் *(outlaw)* அவரைப் பின்தொடர்ந்து வந்துகொண்டிருந்தான். அவர் தங்கத்தை அந்தப் பழைய ஸ்பானிஸ் சுரங்கங்களில் இருந்து கண்டு பிடித்து எடுத்திருந்தார், அவர் அதனோடு உள்ளே வந்திருந்தார். அந்த நாய் குரைக்கத் தொடங்கியது.

106. அந்த நாய் தொந்தரவுபடுத்துவதை அம்மனிதர் விரும்பவில்லை. அவர், "வாயை மூடு" என்றார். மேலும் அவர், "நாளை இதை நகரத்திற்குள் எடுத்துக் கொண்டு போய் விடுவேன்" என்றார். அந்த சம்பவத்தின்

நன்நடத்தை நீதி விஷயங்கள் *(morals)* இவைதான். "நான் இதை நிறுத்துப் பார்த்து இதன் எடையை அறிந்து கொள்வேன், (பிறகு) ஒரு பணக்காரன் ஆவேன். நான் பெரிய கார்களையும் வாங்குவேன். நான் எல்லாவிதமான பெண்களையும் பெரிய பார்ட்டிகளையும் கொண்டிருப்பேன். நான் ஒரு பணக்காரனாய் இருப்பேன், ஏனென்றால் நான் ஏற்கனவே உரிமைகோரிப் பெறப்பட்ட பொருளைக் கண்டுபிடித்திருக்கிறேன். இங்கே என்னிடம் நிறைய தங்கம் உள்ளது" என்றான். மேலும், "நான்... இருப்பேன்" என்றான்.

107. அவன் போய் தூங்க முயற்சிக்கையில், நாய் தொடர்ந்து குரைத்துக் கொண்டிருந்தது, ஏனென்றால் அந்தக் கொள்ளைக்காரன் *(outlaw)* பதுங்கி பதுங்கி வந்து கொண்டிருப்பதை அந்த நாய் பார்த்து விட்டது, அவன் இந்த கனிம ஆராய்ச்சியாளர் தூங்கப் போவதற்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

108. அவன் மீண்டும் எழுந்து, திரும்பவும் நாயைப் பார்த்து சத்தமிட்டு, "வாயை மூடு"

என்றான். அந்தப் பரிதாபமான நாய் ஊளையிட்டபடி, ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது – வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று தன்னுடைய எஜமானை எச்சரிக்கை செய்ய முயற்சித்தது. மேலும் அவன்...

109. அடுத்த முறை அந்த நாய் குரைக்கத் தொடங்கின போது, அந்த கனிம ஆராய்ச்சியாளன் ஒரு சிறு துப்பாக்கியை எடுத்தான். அவனுக்கு தொந்தரவு ஏற்படுவதை அவன் விரும்பவில்லை, எனவே அவன் எழுந்து அந்த நாயைச் சுட்டுத் தள்ளினான். அந்தக் கனிம ஆய்வாளன் அந்த இரவில் அந்தக் கொள்ளைக்காரனால் கொல்லப்பட்டான். அவனுடைய ஆடம்பர கனவுகள் எல்லாம் அவனுக்கு நன்மை ஒன்றும் செய்யவில்லை. ஏன்? அவனை எச்சரிக்கை செய்து கொண்டிருந்த அந்த சத்தத்தை அவன் அடக்கிப் போட்டான்.

110. வாலிப பிள்ளைகளே, நீங்கள் வளர்க்கப்பட்ட விதமாக வளர்க்கப்பட்ட பிறகு, தவறான காரியத்தைச் செய்யாதே என்று

ஏதோவொன்று கூறுவதை நீங்கள் உணருவது வரை, உங்களால் ஒருபோதும் தவறான எதையும் செய்ய முடியாது, யாருமே எதையும் செய்து பார்க்க அவர்களால் கூடாது. இப்பொழுது, உங்களை எச்சரிக்கை செய்யும் அந்த சத்தத்தை ஒருபோதும் அமைதிபடுத்தி அடக்கிப்போடாதீர்கள்.

111. இதை எப்போதுமே நினைவில் கொள்ளுங்கள், "என்னைப் பின்பற்றிவா" என்று கூறுகிற அந்த சத்தத்தை ஏற்றுக் கொள்ளுங்கள், அப்போது நீங்கள் எப்போதுமே சரியாக வெற்றி பெறுவீர்கள். நீங்கள் அவ்வாறு வெற்றி பெறுவீர்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். நான் உங்களை நம்புகிறேன். ஆனால் இயேசுவாகிய, அந்த சத்தமானது இன்றிரவும் பூமியில் ஜீவித்துக் கொண்டிருக்கிறது என்பதை எப்போதுமே ஞாபகம் கொள்ளுங்கள்.

★★★★★